pricol

PRICOL LIMITED
Passion to Excel

109, Race Course,
Coimbatore-641 018, India

+91 422 433 6000
connect@pricol.com
pricol.com

CIN: L34200TZ2011PLC022194
CUSTOMERS EMPLOYEES SHAREHOLDERS SUPPLIERS

PL/SEC/TGT/2026-2027/64 Friday, 31st July 2026

Listing Department **National Stock Exchange of India Limited** "Exchange Plaza', C-1, Block G Bandra-Kurla Complex, Bandra (E), Mumbai - 400051	Corporate Relationship Department **BSE Limited** 1st Floor, New Trading Ring Rotunda Building, P J Towers, Dalal Street, Fort, Mumbai 400 001
Scrip Code: PRICOLLTD	Scrip Code: 540293

Dear Sir,

Sub: **Standalone and Consolidated unaudited Financial Results for the quarter ended 30th June 2026 – Newspaper Advertisement**

Pursuant to Regulation 30 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we submit herewith the Copy of Newspaper advertisement in respect of the unaudited financial results for the quarter ended 30th June 2026.

This is for your information and dissemination.

Thanking you
Yours faithfully,
For Pricol Limited

T G THAMIZHANBAN Digitally signed by T G THAMIZHANBAN Date: 2026.07.31 10:18:36 +05'30'

T.G.Thamizhanban
Company Secretary
ICSI M.No: F7897

Encl. As above

திருப்பூர் மாவட்டத்தின் முக்கிய நீர் நிலைகளில் ஒன்றான சாமளாபுரம் குளம் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இது அப்பகுதியில் 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்கிறது.

சாமளாபுரம் குளத்துக்கு உள்ளூர் பறவைகளான கொக்கு, வாத்து, நாரை, மீன்கொத்தி, நீர்க்காகம் ஆகியவை வந்து செல்வதுடன், மார்ச் முதல் நவம்பர் வரை வடக்கு ஆசியா, சைபீரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பறவைகள் வலசைக்காக வந்து செல்கின்றன.

நீலகிரியில் தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் வறட்சி

வன விலங்குகள், கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை அபாயம்

■ஊட்டி

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யாததால் பல பகுதிகள் கடும் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளன. குறிப்பாக கல்லட்டி பள்ளத்தாக்கு, மாவநல்லா, வாழைத்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் நிலவும் வறட்சியால் வன விலங்குகள் மற்றும் கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை அபாயம் ஏற்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்யும். இந்த மழையை நம்பியே மாவட்டத்தின் குடிநீர் மற்றும் பாசனத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. மேலும் முக்கிய நீர்நிலைகள், குளங்கள், அணைகள் உள்ளிட்டவை முழுக் கொள்ளளவை எட்டும். ஆனால், இந்த ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் மழைப்பொழிவு குறைந்ததால் மாவட்டத்தின் பல பகுதிகளில் வறட்சி உருவாகியுள்ளது. இதனால் கல்லட்டி பள்ளத்தாக்கு, மாவநல்லா, வாழைத்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் பசுந்தீவனங்கள் வறண்டு போயுள்ளன. இதனால் மான் உள்ளிட்ட வன விலங்குகள் உணவு மற்றும் குடிநீர் தேடி அலைந்து வருகின்றன. அதே போல் மாடு, ஆடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு எல் நினோ தாக்கம் ஏற்படக்கூடும் என வானிலை ஆய்வு மையங்கள் ஏற்கெனவே எச்சரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில், தற்போது அதன் ஆரம்பக்கட்ட விளைவுகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன. பல குளங்கள் மற்றும் சிறிய நீர்நிலைகளில் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மழைப்பொழிவு இல்லாத நிலை நீடித்தால் குடிநீர் தட்டுப்பாடு, விவசாய இழப்பு மற்றும் வன விலங்குகள் வாழ்வாதாரத்தில் மேலும் பாதிப்புகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக பொதுமக்களும் விவசாயிகளும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட நிர்வாகம் மற்றும் வனத்துறை உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது.

முதுமலை வெளிவட்ட பகுதியில் வறட்சியால் உணவு தேடி அலையும் புள்ளி மான்.

நீலகிரி மாவட்டத்தில்

சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்

அரசுத் துறையினருக்கு ஆட்சியர் அறிவுறுத்தல்

■ஊட்டி

நீலகிரி மாவட்டத்தில் சாலையோர ஆக்கிரமிப்புகள் மற்றும் விதி மீறி சாலைகளில் நிறுத்தப்படும் வாகனங்களை காவல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் இணைந்து கண்காணித்து அகற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா அறிவுறுத்தியுள்ளார்.

நீலகிரி மாவட்ட கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில், நுகர்வோர் அமைப்புகளுடனான மாவட்ட அளவிலான காலாண்டு ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் லட்சுமி பவ்யா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி முன்னிலை வகித்தார். மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சரவணன் வரவேற்றார். இக்கூட்டத்தில் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் ஆல்துரை, கோத்தகிரி புளூமவுண்டன் நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் முகமது சலீம், நிர்வாகி முகமது இஸ்மாயில், உதகை நுகர்வோர் பாதுகாப்பு சங்கத் தலைவர் அர்ஜுனன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பொதுமக்கள் நலன் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா பேசுகையில், “அனைத்து துறை அலுவலர்களும் நுகர்வோர் அமைப்புகளுடன் துறை வாரியான காலாண்டு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, அதன் அறிக்கைகளை வரும் ஆகஸ்ட் 15-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். பொதுமக்களுக்கு இடையூறாக தெருக்களில் கால்நடைகளை விடுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், பொதுக் கழிப்பிடங்களில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா என்பதையும் நகராட்சி நிர்வாகங்கள் கண்காணிக்க வேண்டும்.

மாவட்டத்தில் சாலையோர ஆக்கிரமிப்புகள் மற்றும் விதி மீறி சாலைகளில் நிறுத்தப்படும் வாகனங்களை காவல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் இணைந்து கண்காணித்து அகற்ற வேண்டும். சிற்றுந்து கட்டண உயர்வு புகார் தொடர்பாக வட்டார போக்குவரத்து அலுவலர் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோத்தகிரி மற்றும் பந்தலூர் பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்து வருவதால், வனத்துறையினர் அவற்றை பிடித்து வனப்பகுதிகளில் விட வேண்டும்” என்றார்.

இக்கூட்டத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள், நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தெருவிளக்கு பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

திருப்பூர் மாநகராட்சி கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் தர்ணா

■திருப்பூர்

திருப்பூர் மாநகரில் தெரு விளக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காண கோரி மாநகராட்சி கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் தர்ணாவில் ஈடுபட்டனர்.

திருப்பூர் மாநகராட்சி மன்ற கூட்டம் மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு துணை மேயரும், பொறுப்பு மேயருமான ஆர்.பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். மாநகராட்சி ஆணையர் எம்.பி. அமித் முன்னிலை வகித்தார். இதில், மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் ஆர்.அன்பகம் திருப்பதி பேசுகையில், “கோவை மாநகராட்சியை விட சொத்துவரி அதிகமாக உள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் 3-ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களுடன் மேயர் தீர்மானம் நிறைவேற்றி, தமிழக அரசுக்கு அனுப்பிவைத்தார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. ஆகவே, புதிய அரசு அமைந்துள்ளதால் மீண்டும் சொத்து வரி உயர்வை ரத்து செய்யக்கோரி தீர்மானம் நிறைவேற்றி முதல்வரிடம் வலியுறுத்த வேண்டும்” என்றார்.

கவுன்சிலர் ஈஸ்வரமூர்த்தி பேசுகையில், “மாநகராட்சி முழுவதும் குப்பை மலைபோல் குவிந்து கிடக்கிறது. குப்பை கொட்ட இடமில்லாததால் பாறைக்குழிகளை நம்பாமல் நிரந்தரத் தீர்வு காண வேண்டும்” என்றார்.

இதேபோல், தெருவிளக்கு பிரச்சினைக்கு தீர்வு கா[illegible]வலியுறுத்தி அதிமுக உ[illegible]னர்கள் தர்ணாவில் [illegible]ட்டனர். அப்போது [illegible]ராட்சி[illegible]து மண்ட[illegible]க்கு [illegible]பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகள் பெரும்பாலும் மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளாகும். அப்பகுதிகளில் தெரு விளக்குகளின் தேவை அதிகரித்துள்ளது. தெருவிளக்கு கோரி விண்ணப்பிக்கும் முறையில் குளறுபடி உள்ளது என கூறி கவுன்சிலர்கள் தர்ணாவில் ஈடுபட்டனர். இதையடுத்து 15 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும் என மாநகராட்சி ஆணையர் எம்.பி. அமித் உறுதியளித்தார். பின்னர், கவுன்சிலர்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

திருப்பூர் மாநகராட்சி கூட்டத்தில் தெரு விளக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண கோரி தர்ணாவில் ஈடுபட்ட அதிமுக கவுன்சிலர்கள்.

தவெக எம்எல்ஏ-விடம் குதிரை பேரம்

கைதான காங்கயம் டாக்டருக்கு ஜாமீன்; கரூர் நபருக்கு முன்ஜாமீன்

■சென்னை

ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ-விடம் குதிரை பேரத்தில் ஈடுபட்டதாக கைதான காங்கயம் டாக்டருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கியுள்ள உயர் நீதிமன்றம், கரூரைச் சேர்ந்த நபருக்கு முன்ஜாமீன் வழங்கியுள்ளது.

ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ இளையராஜாவிடம் குதிரை பேரத்தில் ஈடுபட்டதாக கைதான காங்கயத்தைச் சேர்ந்த டாக்டர் ராஜசேகர் என்பவர் ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதேபோல கரூர் செங்குந்தபுரத்தைச் சேர்ந்த கனகராஜ் என்பவர் முன்ஜாமீன் கோரி மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுக்கள் மீதான விசாரணை நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பாக நடந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் இந்த வழக்கில் முழுமையான ஆதாரங்கள் இல்லாமல் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது. அதையடுத்து நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட டாக்டர் ராஜசேகருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கியும், கனகராஜுக்கு நிபந்தனை முன்ஜாமீன் வழங்கியும் உத்தரவிட்டார்.

அதன்படி இருவரும் காலை, மாலை என இருவேளைகளிலும் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்றும், விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும் நிபந்தனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

சட்ட விரோதமாக வெடிமருந்து வைத்திருந்த 2 பேர் கைது

■திருப்பூர்

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் அருகே சட்ட விரோதமாக வெடிமருந்து பதுக்கி வைத்திருந்த 2 பேரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

முத்தூர் அருகே சட்டவிரோதமாக வெடிமருந்து பதுக்கி வைத்திருப்பதாக வெள்ளகோவில் போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் அப்பகுதியில் போலீஸார் சோதனை நடத்தினர்.

அப்போது, செங்கோடம்பாளையத்தைச் சேர்ந்த குப்புசாமி என்பவரது தோட்டத்து வீட்டில் வெடிமருந்து பதுக்கிவைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீஸார் அங்கு சென்று வெடிமருந்துபொருட்களை கைப்பற்றினர். மேலும், இதில் தொடர்புடைய கிணறு வெட்டும் தொழிலாளியான செந்தில்குமார் (32), மற்றும் குப்புசாமி (56) ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

39 காவல் அதிகாரிகள் பணியிட மாற்றம்

■திருப்பூர்

திருப்பூர் மாநகரில் 39 காவல் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து மாநகர காவல் ஆணையர் எஸ்.ராஜேஸ்வரி உத்தரவிட்டுள்ளார்.

திருப்பூர் மாநகர காவல் துறையில் நிர்வாக வசதி மற்றும் பணியிட மாறுதல் அடிப்படையில் 2 உதவி ஆய்வாளர்கள், 11 தலைமை காவலர்கள், 2 முதல்நிலை காவலர்கள் மற்றும் காவலர்கள் என மொத்தம் 39 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வெவ்வேறு காவல் நிலையங்களுக்கும், சிறப்பு பிரிவுகளுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, வடக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் பரந்தாமன் மாநகர கட்டுப்பாட்டு அறைக்கும், தெற்கு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முருகேசன் அனுப்பர்பாளையம் காவல் நிலையத்துக்கும், தெற்கு காவல் நிலைய நுண்ணறிவு பிரிவு தலைமைக் காவலர் போதைப்பொருள் தடுப்பு பிரிவுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வடக்கு காவல் நிலைய தலைமைக்காவலர், தெற்கு நுண்ணறிவுப் பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல், [illegible]நகரில் பல்வேறு காவல் நிலைய[illegible]ில் ப[illegible]யாற்றி வந்த தலைமைக்கா[illegible]ர்க[illegible]முதல் நிலைக் காவலர்கள் மற்[illegible]காவ[illegible]ள் நிர்வாகக் காரணங்களுக்[illegible] மா[illegible] பட்டுள்ளனர்.

பள்ளிகளில் கல்விக் கட்டணத்[illegible] கண்காணிக்க சிறப்பு குழு அமைச்சர் ராஜ்மோகன் தகவ[illegible]

■கோவை

பள்ளிகளில் கல்விக் கட்டணத்தை கண்காணிக்க சிறப்பு குழு அமைக்கப்படும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று கோவை வந்த அமைச்சர் ராஜ்மோகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு பள்ளிகளில் கடந்தாண்டை விட நடப்பாண்டு மாணவர் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. இடைநிற்றலில் இருக்கும் மாணவர்களை அடையாளம் கண்டு கொண்டு வந்திருக்கிறோம்.

கம்ப்யூட்டர் சயின்ஸுக்கு தனி புத்தகத்தை 6-ம் வகுப்பிலிருந்து கொண்டு வர இருக்கிறோம். பள்ளிகளில் லஞ்ச லாவண்யங்களை கண்காணிக்கவும், கல்விக் கட்டணத்தை கண்காணிக்கவும் ஒரு சிறப்பு குழு அமைக்கப்படும். பள்ளிகளில் கழிப்பறைகளை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது பள்ளிகளுக்கு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் மட்டுமே பராமரிப்பு தொகையாக அரசு சார்பில் வழங்கப்படுகிறது. அது போதுமானதாக இல்லை. எனவே, முதல்வரின் அனுமதி பெற்று பராமரிப்புத் தொகையை அதிகப்படுத்துவதற்கான அறிவிப்புகள் வரும். முதல்வர் விஜய்யின் கர்நாடக பயணத் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்து அவரது அலுவலகமே அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:

repkovai@hindutamil.co.in

RBI updates Basel Pillar 3 disclosure norms

Asian News International
New Delhi

The Reserve Bank of India on Thursday issued 10 amendment directions revising instructions on Basel Pillar 3 disclosures for commercial banks, small finance banks and payments banks.

The central bank released these final regulations after reviewing stakeholder feedback on draft framework directions originally released in May 2026.

According to the RBI, the updated framework aims to promote market discipline through comprehensive public disclosures. The disclosures intend to provide detailed information regarding the capital position and risk exposures of banking entities operating within the country.

The central bank stated that these disclosure requirements apply across all regulated banking entities.

Under the regulatory framework, the disclosures apply at the top consolidated level of a banking group, while entities that are not the top group entity must make standalone Pillar 3 disclosures.

Bajaj Finance Q1 profit up 29%

GROWTH DRIVERS. The bottomline was boosted by NII, fees & commission income

Scorecard (in ₹ cr)

	Q1FY26	Q1FY27	% change
Net profit	4,133	5,345.5	29.34
Net interest income	9,270	11,495	24.00
Fees & commission income	1,690	2,228	31.83
AUM	3,25,438	4,00,388	23.00

Our Bureau
Mumbai

Bajaj Finance Ltd reported a 29 per cent year-on-year (y-o-y) increase in Q1FY27 standalone net profit, reaching ₹5,345.50 crore against ₹4,133 crore in the year ago quarter, The bottom line being boosted by a healthy growth in net interest income, fees and commission income and deferred tax credit.

It logged a 28 per cent y-o-y growth in consolidated net profit at ₹6,081 crore against ₹4,765 crore in Q1FY26. The consolidated financial results include the results of the parent company, BFL along with its subsidiaries — Bajaj Housing Finance and Bajaj Financial Securities — and its associate companies, Snapwork Technologies and Pennant Technologies.

COMMISSION INCOME

In the reporting quarter, stand-alone net interest income (the difference between interest income and finance costs) increased 24 per cent y-o-y to ₹11,495 crore (₹9,270 crore in Q1FY26). Fees and commission income was up 32 per cent y-o-y to ₹2,228 crore (₹1,690 crore). Deferred tax credit was higher at ₹400 crore against ₹239 crore in the year ago quarter.

Standalone AUM rose 23 per cent y-o-y and stood at ₹4,00,388 crore as at June-end 2026. Consolidated AUM was up 24 per cent y-o-y and stood at ₹5,46,944 crore.

Bajaj Finance aims at 7x jump in AUM to ₹40 lakh cr by 2036

Our Bureau
Mumbai

Bajaj Finance Ltd (BFL) expects its consolidated AUM to multiply about seven times to ₹40 lakh crore by 2036 from ₹5.47 lakh crore as of June-end 2026.

"While it took us 15 years to reach ₹2 lakh crore, it took only three more years to double our AUM... In FY27, BFL on a consolidated basis is poised to deliver AUM of ₹6.3-6.5 lakh crore (against ₹5.10 lakh crore as at March-end 2026) while sustaining its return on assets, return on equity, profitability and risk metrics," Rajiv Jain, Vice-Chairman & Managing Director, told shareholders at BFL's 39th annual general meeting.

The diversified non-banking finance company's (NBFC) has provided long-term guidance on consolidated metrics, including AUM growth in the 23-25 per cent range, profit growth in the 23-24 per cent range and gross non-performing assets of less than 1.4 per cent.

It has subsidiaries such as Bajaj Housing Finance and Bajaj Financial Securities.

Rajiv Jain, Vice-Chairman & MD, Bajaj Finance Ltd

Emphasising that GDP and the financial ecosystem are deeply connected, Jain noted India's domestic credit has grown at a compounded annual growth rate (CAGR) of 15 per cent to ₹235 lakh crore in the last 21 years.

So, even if India's domestic credit grows at 12 per cent, it is likely to reach ₹729 lakh crore by FY2036.

AUM GROWTH

He underscored that BFL's AUM has grown at a CAGR of 34 per cent since inception, reaching ₹5.10 lakh crore as at March-end 2026.

Hence, even if BFL grows at a CAGR of 23 per cent for the next 10 years, its AUM will be ₹40 lakh crore by FY2036, resulting in a market share of 5 per cent of India's total credit.

Jain said the company intends to deploy over 300 AI use cases in FY27, including AI text and voice bots for customers, facial recognition at branches and stores, ornament identification and classification and property documents assessment.

INDIA'S DEVELOPMENT

Sanjiv Bajaj, Chairman, BFL, observed that the next phase of India's development will be driven not only by large corporations but also by millions of small businesses, self-employed professionals, farmers, and first-generation entrepreneurs across both urban and rural India. Access to finance will be critical in converting these aspirations into achievement.

"Your company, Bajaj Finance's vision is closely aligned with enabling these ambitions—by expanding financial inclusion, supporting MSMEs, empowering entrepreneurs and bringing first-time borrowers into the formal financial ecosystem," he said.

Sanmar Group invests ₹100 cr in Aham Housing

Sindhu Hariharan
Chennai

The Sanmar Group has invested ₹100 crore in tech-powered affordable housing finance company Aham Housing Finance, which is focused on underserved and emerging borrower segments.

The equity investment was executed by Sanmar through one of its group entities and following this transaction, Sanmar holds around 43 per cent equity stake in Aham Housing Finance.

Aham Housing Finance plans to use the funds to deepen its presence in existing geographies, enter select new markets, and continue investing in technology, underwriting and risk-management capabilities to better serve self-employed and first-time homebuyers. Existing investors, including Negen Capital, continue to remain associated with the company.

Vijay Sankar, Chairman, The Sanmar Group, told *businessline* that they wanted to participate in the growth journey of fast-growing segments that also satisfy societal needs.

"Aham helps the society become homeowners and that is the rationale behind this investment," he said. This is the first time Sanmar has made such an investment and he calls it "long-term patient capital."

"It is a good team, they are conservative, are good risk managers and importantly there is a strong cultural alignment, transparency, and professionalism," he added.

Vijay Sankar, Chairman, The Sanmar Group

Venkatesh Kannappan, Founder & Managing Director, Aham Housing Finance, said their focus had never been growth at any cost but creating a housing finance institution that can scale while remaining relevant to the realities of this customer segment.

"Sanmar's investment is a strong endorsement of the work our team has put in over the years and builds on the confidence placed in us by our existing investors," he said.

"Leveraging a stronger balance sheet will also help to lower cost of funds and secure additional bank lines," he added.

AHAM'S NETWORK

The company is also su[illegible]ted by directors including SV Raj[illegible] Vaidyanathan (formerly [illegible]nected with Asirvad Micro Fi[illegible]ance) Srinivas Acharya (former MD of Sundaram Home Finance).

Aham operates a growing network of over 30 branches across Tamil Nadu, Andhra Pradesh, Karnataka and Telangana.

Lenovo encourages hybrid AI model to address token costs

Our Bureau
Mumbai

Lenovo India plans to address concerns around rising token costs with a streamlined AI model that functions across cloud, local infrastructure and customer devices to drive up efficiency by 6-fold, officials said in an interaction with the media.

Speaking at a media round table, the company reported a 165 per cent revenue growth in its Infrastructure Solutions Group (ISG) business, as per Ashley Gorakhpurwalla, Executive Vice-President and President ISG, Lenovo. Further, it ranked among the top three companies for servers in the country.

"Our ability as an infrastructure provider and an AI technology provider is that we understand the entire stack. We have found that when we produce tokens on infrastructure that we own, it's six times effective," said Gorakhpurwalla.

Making a case for the hybrid AI approach, including edge, data centre, cloud and the ability to move intelligence to data, the President said the company is encouraging customers to opt for owned, on-premise infrastructure. Speaking about opportunities in India, Lenovo said the country's infrastructure is improving at [illegible]ate in[illegible]dicating advan[illegible]ative to power d[illegible] Accordingly, the c[illegible]pany is investing th[illegible] region.

pricol PRICOL LIMITED

Regd. Office : 109, Race Course, Coimbatore - 641 018. Phone : + 91 422 4336000
Website : www.pricol.com | Email: cs@pricol.com | CIN. L34200TZ2011PLC022194

STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE 2026 (₹ in Crores)

PARTICULARS	Standalone			Consolidated		
	For the Three Months Ended		For the Year Ended	For the Three Months Ended		For the Year Ended
	30-Jun-2026	30-Jun-2025	31-Mar-2026	30-Jun-2026	30-Jun-2025	31-Mar-2026
	Unaudited		Audited	Unaudited		Audited
1. Total Income	853.60	684.41	3,126.97	1,107.86	897.59	4,052.37
2. Net Profit / (Loss) before tax , Exceptional and Extraordinary Items	66.93	53.22	268.57	87.47	66.15	330.94
3. Net Profit / (Loss) before tax (after Exceptional and Extraordinary items)	66.93	53.22	268.57	87.47	66.15	330.94
4. Net Profit / (Loss) after tax	49.43	39.17	207.34	67.02	49.89	250.80
5. Total Comprehensive Income	49.16	38.70	206.15	63.97	50.69	263.24
6. Cash Profit	73.60	61.33	301.08	95.81	79.34	383.20
7. Paid-up-Equity Share Capital (Face Value of ₹ 1/- each)	12.19	12.19	12.19	12.19	12.19	12.19
8. Reserves Excluding Revaluation Reserves as per Balance Sheet of previous accounting year			1,118.49			1,242.70
9. Earnings per Equity Share for Profit / (Loss) (Face Value of ₹ 1/-) in Rupees — Basic / Diluted (not annualised for quarters)	4.05	3.21	17.01	5.50	4.09	20.57

Scan for Detailed Financial Results

Note:
The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the financial results are available on the Stock Exchange websites www.bseindia.com, www.nseindia.com and Company's website www.pricol.com.

By Order of the Board
VIKRAM MOHAN
CHAIRMAN & MANAGING DIRECTOR
DIN: 00089968

30th July 2026
Coimbatore